2. தகவல் கோரல்

உறுப்பினரின் முன்னறிவிப்பு

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருந்த கவன ஈர்ப்பு என்னவாயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வைதியலிங்கம், அது ஆய்வில் இருக்கிறது.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னையில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சென்னையில் நிலவிவரும் குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. துரைமுருகன் அவர்களும், ஒத்திவைப்புத் தீர்மானம் மற்றும் கவன ஈர்ப்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஐ. கணேசன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். தீர்மானத்தை மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். முதலில் திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் ஏற்பட்டிருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலே இருந்து பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறது. பத்திரிகைகளிலேயும் பக்கம் பக்கமாக அது குறித்து செய்திகள் வருகின்றன. ஆனால், நிலைமையை நோக்குகிறபோது அதற்கு எந்தவிதமான பரிகாரத்தையும் இதுவரையில் கண்டதாக இல்லை. ஒரு நாள் பார்த்தால் கிருஷ்ணா தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள். ஆனால், இப்போது கிருஷ்ணா தண்ணீர் முழுவதுமாக நின்றுவிட்டது என்ற செய்தி வந்திருக்கிறது. மறுநாள் பார்த்தால் பள்ளிப்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறோம், தாமிரபரணியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறோம், மேட்டூரிலிருந்து வருகிறது, ஈரோட்டிலிருந்து வருகிறது என்று எத்தனையோ இடங்களைச் சுட்டிக்காட்டிக் கொண்டு இருந்தாலும் நிலைமை இங்கு மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு தனிக்